# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## கடற்றொழில், நீர்வாழ், உயிரின வளங்களுக்கான இலங்கை அவை (கூட்டிணைத்தல்)

**கடற்றொழில், நீர்வாழ், உயிரின வளங்களுக்கான இலங்கை அவையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[ **35 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009503-225 (2015/12)

**கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவை (கூட்டிணைத்தல்)**

## கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவை (கூட்டிணைத்தல்) சட்டம்

*முன்னுரை.*

"கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான அவை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அவையொன்று, இலங்கையில் கடற்றொழில், நீர்வாழ், உயிரின வளங்களின் ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருடன், பயனுறத் தொடர்பு கொள்வதையும், ஒத்துழைப்பதையும் மேம்படுத்துவதற்காகவும், அதன் குறிக்கோள்களை அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அமைப்பு விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்துக்கெனவும் இலங்கையில் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :

சொல்லப்பட்ட அவையானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் நோக்கங்களையும் மேலும் பயனுறக் கொண்டுநடாத்தவும் நிறைவேற்றவும் இயலச்செய்வதற்காக, கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களுக்கு நன்மைபயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்களுக் கான இலங்கை அவையைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "அவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவை தற்போது உறுப்பினராகவுள்ளவர்களான அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களாக அத்தகையோரான அத்தனை ஆட்களும் (அவர்கள் அவ்வாறு உறுப்பினராகத்

2-PL 009503-350 (2015/11)

தொடர்ந்திருக்கும்வரை) (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களுக்கான இலங்கை அவை” என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அதுவழக்குத்தொடுக்கலாம் ; அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்களின் ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் மத்தியில் பயனுள்ள தொடர்பையும், ஒத்துழைப்பையும், மேம்படுத்தல் ;

(ஆ) இலங்கையில் அத்தகைய நடவடிக்கைகளில் கரிசனை கொண்ட அரச சார்புள்ளதும் அரச சார்பற்றதுமான அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு ஒத்துழைப்பு வழங்குதல் ;

(இ) இலங்கையில் நீர்வளத்தின் முக்கியத்துவத்தையிட்டு விழிப்புணர்ச்சியை பயன்படுத்துதலும், பரப்புதலும் அத்துடன் அவ்வளத்தை நற்பயனுக்கிடுதலும், பேணுதலும், அபிவிருத்தி செய்தலும் ;

(ஈ) நீர்வளங்களை அபிவிருத்தி செய்தல், பேணுதல் தொடர்பான விடயங்கள் கொள்கைகளை விஞ்ஞானிகளும் வேறு ஆளணியினரும் ஆலோசிப்பதற்கான ஒரு அமைப்பாகச் சேவையாற்றல் ; அத்துடன்

(உ) வேறு அறிவியல் ஒழுங்கமைப்புகளுடன் தொடர்பேற் படுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம், தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக்கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களை கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், அளிப்புகளையும், நன்கொடைகளையும், பெறவும் அல்லது சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடுசெய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், சேவைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அமைப்பு விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவ்விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடிய பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த நிறைவேற்றுக் குழுவொன்றினால் கூட்டுத்தாபனத்தின் அமைப்பு விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் தொடங்கும் தேதியன்று பதவிவகிக்கும் அவையின் நிறைவேற்றுக் குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக அமைதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அமைப்பு விதிகள்.

**6**. (1) ஏதேனும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக்கொண்டு கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அமைப்பு விதிகளைக் காலத்துக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல்

வேண்டும். அத்தகைய அமைப்பு விதிகள் ஆக்கப்பட்டதும், அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் அமைப்புவிதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

ஆதனங்களைக் கொள்வதற்கும் பணம் திரட்டு வதற்குமான தத்துவம்.

**7.** (1) கூட்டுத்தாபனமானது, கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, கொடுத்துமாற்றல் அல்லது வேறுவகையாக அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருப்பதற்காகவும், கூட்டுத்தாபனத்தால் கொள்ளப்படும் அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் அத்தகைய ஆதனத்தைக் கையுதிர்க்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான பணத்தை இரவல் பெறுவதற்கு அல்லது திரட்டுவதற்கு அத்துடன் அத்தகைய பணத்தைப் பெறுவதற்கு ஏதேனும் ஈடுகளை முறிகளை அல்லது கடப்பாடுகளை உருவாக்குவதற்கு, எழுதி நிறைவேற்றுவதற்கு அளித்தற்கு அல்லது வழங்குவதற்குத் தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் அல்லது அமைப்பு விதிகளின்கீழ் கூட்டுத்தாபனத்தால் கொள்ளப்படும் அல்லது வைத்திருக்கப்படும் எல்லா அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களும், அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அமைப்பு விதிகளுக்கு இணங்கவும் அதன் பிரிவுகளுக்கு அமைவாகவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படவும், பயன்படுத்தப்படவும், பிரயோகிக்கப்படவும் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனமானது அத்தகைய எல்லா ஆதனங்களையும் காலத்துக்குக்காலம் வாங்குவதற்கு, விற்பதற்கு, அளிப்பதற்கு, எழுதி வழங்க, கையளிக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க அல்லது ஈடுவைக்கவும் அதன் நிதியங்களை அதன் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வது அவசியமாகக்கூடிய அல்லது வசதியாகக்கூடிய அவ்விதத்தில் முதலீடு செய்யவும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

*கட்டணங்களும் சந்தாத் தொகைகளும் விதிப்பதற்கான தத்துவம்.*

**8.** கூட்டுத்தாபனமானது, சட்டப்படி,–

(அ) அதனால் நடாத்தப்படும் ஏதேனும் கற்கைநெறிக்குச் சேர்த்துக்கொள்வதற்கு அல்லது பரீட்சைக்காக அது நியாயமானதெனக் கருதும் அத்தகைய கட்டணத்தை ;

(ஆ) அதன் ஏதேனும் உறுப்பாண்மை வகுப்புக்கு ஆட்களைத் தேர்வதற்கு என கட்டணத்தை ; அத்துடன்

(இ) அதனால் ஏற்பாடுசெய்யப்படும் சேவைகள் தொடர்பில் அது நியாயமானதெனக் கருதும் சந்தாப் பணங்கள், அத்துடன் கட்டணங்களை விதிப்பதற்கு இயலுமானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டியதும், கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதுமான தனிசுகள்.*

**9.** இச்சட்டம் தொடங்கும்போது அவைக்குள்ள எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும், கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டும் அத்துடன் வருமதியான எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படற்பாலவையான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*குழுக்களை நியமித்தல்.*

**10.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் குழுக்களை நியமிக்கத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்ல காலத்துக்குக்காலம் அவசியமானதெனக் காணப்படும் அத்தகைய வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்பட வேண்டுமென்பது.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, குழுவினால் காலத்துக்குக்காலம் நிலையியல் கட்டளைமூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்களான அத்தகைய ஆட்கள் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான எந்தச் சாசனத்திலும் இடப்படலாகாது. அத்தகைய ஆட்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும், அத்துடன் அவ்வாறு கையொப்பமிடுதலானது, சாட்சியாக, எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*